## விருதுநகர் மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை

**(ஏப்ரல் 8-ம் தேதி முதல் ஏப்ரல் 12-ம் தேதி வரை)**
**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

### முந்தைய வார வானிலை (1.4.15- 6.4.15)

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 9.2 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 34- 39 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 24- 27 |
| வானம் (ஆக்டா) | 2- 7 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 64- 84 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 36- 56 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 3- 14 |
| காற்றின் திசை | 110- 180 |

### 12.4.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>8.4.15 | நாள் 2<br>9.4.15 | நாள் 3<br>10.4.15 | நாள் 4<br>11.4.15 | நாள் 5<br>12.4.15 |
| மழை (மி.மீ.) | 2 | 2 | 0 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 39 | 39 | 39 | 40 | 40 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 26 | 26 | 26 | 27 | 27 |
| வானம் (ஆக்டா) | 3 | 5 | 3 | 3 | 3 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 40- 72 | 40- 72 | 40- 72 | 37- 70 | 37- 70 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 8/ தெற்கு | 8/ தெற்கு | 8/ தென்கிழக்கு | 8/ தெற்கு | 8/ தெற்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் இலேசான மேகமூட்டம், மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர் / சாகுபடி சூழல் | பருவம் /சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| பருத்தி | முதிர்ச்சி பருவம் | பருத்தியில் கடைசி அறுவடைக்குப்பிறகு பயிர்க்கழிவுகளை சுழல்வெட்டியை (rotoslasher) பயன்படுத்தி மண்ணோடு சேர்க்கவும். இவ்வாறு செய்வது மண்வளத்தை மேம்படுத்தவும் மண்ணின் ஈரத்தை பாதுகாக்கவும் உதவும். |

| | | |
|---|---|---|
| மா | பூக்கும் பருவம் | மாமரத்தில் பூத்தலை ஊக்குவிக்க யூரியா 5 கிராம்/ லிட்டர் அல்லது பொட்டாசியம் நைட்ரேட் 10 கிராம்/ லிட்டர் என்ற அளவிலும் காய் பிடித்தலை மேம்படுத்த என்.ஏ.ஏ. (NAA) என்ற வளர்ச்சி ஊக்கியை 20 மில்லி கிராம்/ லிட்டர் என்ற அளவிலும் தெளிக்கவும். பிஞ்சு கடுகு அளவில் இருக்கும் பருவத்தில் பொட்டாசியம் நைட்ரேட் 20 கிராம்/ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| கத்தரி | பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் | கத்தரிக்கு மகசூலை மேம்படுத்த வளர்ச்சி ஊக்கியான டிரையாகான்டனால் 2 பி.பி.எம்.+ சோடியம் போரேட் அல்லது போராக்ஸ் 35 மி.கி./ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| தக்காளி | பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் | தக்காளியில் காய்க்கும் பருவம் முக்கியமான பருவமாதலால் ஊட்டச்சத்துக்களை சொட்டு நீர்ப்பாசனம் மூலம் அளிக்கவும். 12- 61- 0 உரம் 1.14 கிலோ/ எக்டர், 13- 0- 45 உரம் 6.17 கிலோ/ எக்டர் மற்றும் யூரியா 2.8 கிலோ/ எக்டர் என்ற அளவில் பாசன நீருடன் சேர்த்து அளிக்கவும். |
| கால்நடை பராமரிப்பு | வெப்பத்தின் தாக்கத்தை குறைத்தல் | வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிக வெப்பநிலையின் தாக்கத்தை குறைக்க கால்நடைகளுக்கு குளிர்ந்த நீர் மற்றும் பசுந்தீவனங்களை போதிய அளவு அளிக்கவும். கொட்டைகையை சுற்றிலும் கோணிப்பைகளை கட்டி நீரை தெளித்து அதிக வெப்பநிலையின் தாக்கத்தை மட்டுப்படுத்தவும். |

குறுஞ்செய்தி- மழை: ஏப்ரல் 8& 9 ம் தேதிகளில் 2 மி.மீ. பருத்தியில் கடைசி அறுவடைக்குப்பிறகு பயிர்க்கழிவுகளை சுழல்வெட்டியை பயன்படுத்தி மண்ணோடு சேர்ப்பதால் மண்வளம்& ஈரத்தை பாதுகாக்க இயலும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி